## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - வன்கொடுமைத் தடுப்பு - தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளுள் விதி எண்.110-இன்கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு - வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழக்கின் தன்மைக்கேற்றவாறு வழங்கப்பட்டுவரும் தீருதவி தொகை – குறைந்தபட்ச தொகையான ரூ.85,000-ஐ ஒரு இலட்சமாகவும், அதிகபட்ச தொகையான ரூ.8,25,000-ஐ ரூ.12 இலட்சமாகவும் உயர்த்தி வழங்கி - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(கொடு.தடு1)துறை**

**அரசாணை (நிலை) எண்: 94**

**நாள்: 24.11.2021**
**பிலவ கார்த்திகை 8-ஆம் நாள்**
**திருவள்ளுவர் ஆண்டு 2052**

**படிக்கப்பட்டது**

1. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை எண்.27, நாள்.08.09.2021.
2. ஆதிதிராவிடர் நல ஆணையரின் கடிதம் ந.க.எண்.ஏ4/26442/2021, நாள் 13.09.2021.

----------

**ஆணை:**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) விதி 1995, விதி 12(4) பிற்சேர்க்கை I-இன்படி, வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழக்கின் தன்மைக்கேற்றவாறு, குறைந்தபட்சமாக ரூ.20,000மும் அதிகபட்சமாக ரூ.2,00,000மும் தீருதவியாக வழங்கப்பட்டு வந்தது. பின்னர் அத்தொகையானது, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) திருத்த விதி 2016-இன்படி குறைந்தபட்சமாக 85,000 ரூபாயாகவும், அதிகபட்சமாக 8,25,000 ரூபாயாகவும் வழங்கப்பட்டு வருகிறது.

2. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற பேரவை விதிகளுள் விதி எண்.110-இன் கீழ் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டார்கள்:

"வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழக்கின் தன்மைக்கேற்றவாறு, 85,000 ரூபாயிலிருந்து 8,25,000 வரை

தற்சமயம் வழங்கப்பட்டு வருகிறது. இனி இத்தொகை பாதிக்கப்பட்டவர்களுக்கு குறைந்தபட்சமாக ஒரு இலட்சம் ரூபாயும், அதிகபட்சமாக 12 இலட்சம் ரூபாயாகவும் மாநில அரசு நிதி மூலம் உயர்த்தி வழங்கப்படும்"

3. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், ஆதிதிராவிடர் நல ஆணையர், வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தீருதவி வழங்குவதற்காக 2021-2022ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் மத்திய அரசின் 50% பங்குத் தொகையாக ரூ.15.00 கோடியும், மாநில அரசின் 50% பங்குத் தொகையாக ரூ.15.00 கோடியும் ஆக மொத்தம் ரூ.30.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு குறைந்தபட்சமாக ஒரு இலட்சம் ரூபாயும், அதிகபட்சமாக 12 இலட்சம் ரூபாயாகவும் உயர்த்தி வழங்குவதுடன், அதற்காக ஏற்படும் கூடுதல் நிதியினை மாநில அரசின் பங்குத் தொகைக்கான கணக்குத் தலைப்பில் ஒதுக்கீடு செய்து ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. ஆதிதிராவிடர் நல ஆணையரின் முன்மொழிவு அரசால் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது. வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழக்கின் தன்மைக்கேற்றவாறு குறைந்தபட்சமாக ரூ.85,000-லிருந்து அதிகபட்சமாக ரூ.8,25,000 வரை தற்போது வழங்கப்பட்டு வரும் தீருதவி தொகை, இனி குறைந்தபட்சம் ஒரு இலட்சம் ரூபாயாகயும், அதிகபட்சம் 12 இலட்சம் ரூபாயாகவும் மாநில அரசு நிதி மூலம் உயர்த்தி வழங்கப்படும் என அரசு ஆணையிடுகிறது.

5. இதற்கான கூடுதல் செலவினத்தினை கீழ்க்காணும் மாநில அரசின் கணக்கு தலைப்பின் கீழ் தேவையின் அடிப்படையில் உரிய முன்மொழிவினை அரசிற்கு அனுப்பி பெற்றுக் கொள்ளுமாறு ஆதிதிராவிடர் நல ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் - 01 மறுவாழ்வு - 200 ஏனைய துயர் தணிப்பு நடவடிக்கைகள் - மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள் - UC கலவரங்களால் பாதிக்கப்பட்ட ஆதிதிராவிடர் / பழங்குடியினருக்கு நிதி உதவி - மாநில அரசின் பங்கு - 351 இழப்பீடு - 02 ஏனைய இழப்பீடுகள்.

(த.தொ.கு.எண்.2235-01-200-UC-35102)

6. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சாரா எண்.52252/நிதித்(ஆதி(ம)பந)துறை/2021, நாள.23.11.2021-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர்

**பெறுநர்**

ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை - 600 009.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை - 600 009.
கூடுதல் காவல்துறை இயக்குநர், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள்,
சென்னை – 600 004.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை – 600 0001.
முதன்மைக் கணக்காயர் (G & SSA), சென்னை - 600 018.
மாநில கணக்காயர், சென்னை - 600 0018/35.
உள்ளுறை தணிக்கை அலுவலர், சென்னை- 600 009.

**நகல்**

முதலமைச்சரின் செயலாளர், சென்னை-600 009.
அமைச்சர் (ஆதிந)அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-600009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,
முதன்மைச் செயலாளரின் தனிச்செயலர், சென்னை - 600 009.
இயக்குநர், தேசிய ஆதிதிராவிடர் நல ஆணையம், சென்னை – 600006.
இயக்குநர், பழங்குடியினர் நல ஆணையம், சென்னை-600006,
நிதித்(ஆதி(ம)பந)வ.செ.பொ.I/வ.செ.பொ.II/வ.வ.I)துறை, சென்னை – 600 009.
சிறப்பு திட்டச் செயலாக்கத் துறை, சென்னை – 600 009.
இருப்புக் கோப்பு/உபரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர் 24/11/21

24/11/2021